" With regard to the hon. Member, Sri Krishnaswami Ayyangar's amendment, because we have stated ' in a place licensed under this Act ', we need not say ' licensed by a licence '. It is quite nuneessary and it is implied there. I do not think there is any need for improving the language now. The clause can stand as it is.

" The hon. Members, Sri Palaniswamy and Sri Kalayanasundaram, want to have restriction placed only in respect of the showing of this film as a business. It will lead to all sorts of difficulties to decide when it is in the form of business and when not. After all, not only if it is in the form of business but even otherwise, if it is being shown, it will have to be regulated in view of the importance of it, in the interests of the public. That is the opinion of the Government. That is why we are taking powers. If the Supreme Court were told that we have no power to intervene at all, then there would be time enough to consider whether in the interests of the community the Constitution should be amended or not. As it s, we are advsed by our Law Officers that it is quite 3-50 p.m.

[Sri C. Subramaniam] [1st April 1955

within our powers. Therefore, there is no question of infringement of any fundamental rights. After all, we have to be guided by our officers rather than by the opinion given either by Sri Palaniswamy or Sri Kalyanasundaram even though they may be advised by their own lawyers. Therefore, I am unable to accept the amendments of Sri Kalyanasundaram and Sri Palaniswamy. The amendment of the hon. Member, Sri Krishnaswamy Ayyangar, is unnecessary. I hope he will withdraw it."

MR. SPEAKER :—" The question is—

' In page 6, line 26, *for* " shall give an ", *substitute* " shall carry on the business of ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

' *For* the words " no person shall give an . . . under this Act ", *substitute* the words " no person shall carry on the business of exhibition of cinematograph except with a licence under this Act ".' "

The amendment was put and lost.

The amendments of Sri Krishnaswami Ayyangar were by leave withdrawn.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 5.

MR. SPEAKER :—" The motion is—

' That clause 5 do stand part of the Bill.' "

SRI M. KALYANASUNDARAM :—" Sir, I move the following amendments :—

' (11) *In page* 7, omit *lines* 15 *to* 18.

'(11) *In page* 7, omit *lines* 15 *to* 18.'

' (12) *In page* 7, after *line* 24, insert *the following*—

" *Provided that the applicant is given a further opportunity to explain either orally or in writing and to answer the adverse points contained in such representation.*" '

' (13) *In page* 8, for *lines* 8 *to* 13, substitute *the following* :—

" (7) *Any person aggrieved by any of the decisions of the licensing authority under this section, may appeal against such decision to the District Judge of the same district (in the case of Madras City to the City Civil Court) within sixty days from the date of receipt of the order.*" '

' (34) *In sub-clause* (1), omit *items* (*c*), (*d*) *and* (*f*).'

1st April 1955]

'(35) *In line* 21, omit *the words* " *or police authority* ".'

'(36) *In sub-clause* (1), *lines* 23–24, for " *interested in* , , . *exhibitions* ", substitute " *of the inhabitants of the locality or of persons interested in cinematograph exhibitions* ".' "

The amendments were duly seconded.

SRI S. S. KOLKEBAIL :—" I move the following amendment :—

'(37) *In sub-clause* (1), omit *item* (*b*).' "

The amendment was duly seconded.

SRI M. PALANIYANDI :—" I move the following amendments :—

'(18) *In sub-clause* (1), omit *items* (*a*) *and* (*b*).'

'(19) *In sub-clause* (1), *item* (*d*), omit " *the price charged for such* . . . *applicants* ".'

'(20) Omit *item* (*f*) *of sub-clause* (1).'

'(21) Add *at the end of sub-clause* JEI, *the following proviso* :—

" *Provided that in respect of such representation an opportunity is given to the person affected thereby to answer the representation.*" '

'(22) Omit *sub-clause* (6).' "

The amendments were duly seconded.

SRI M. NARAYANA KURUP :—" I move the following amendment :—

'(2) *In item* (*e*), add *the following at the end* :—

" *and the nuisance it may cause to surrounding areas* ".' "

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN :—" I move the following amendment :—

'(30) *In sub-clause* (2), *item* (*b*), for " *the safety of the persons* ", substitute " *the safety, convenience and comfort of the persons* ".' "

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMY :—" I move the following amendments :—

'(1) Add *the following as new item* (*g*) after *item* (*f*) :—

" (*g*) the need for preventing monopoly."

'(6) Omit *sub-clause* (1).

'(7) Omit *sub-clauses* (3) *to* (7).' "

The amendments were duly seconded.

[1st April 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Before we proceed with the discussion, I want to say that I propose to accept amendments Nos. 30 and 19. The first amendment is—

'In sub-clause (2), item (*b*) *for* " the safety of the persons ", *substitute* " the safety, convenience and comfort of the persons ".'

" The second amendment is—

'In sub-clause (1), item (*d*), *omit* " The prices charged for such . . . applicant ".' "

3-55 p.m. SRI M PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, பொறுக்குக் கமிட்டி கூடியிருந்த சமயத்தில் சாட்சியம் சொல்ல வந்திருந்தவர்களெல்லோரும் சினிமாக் கொட்டகைக்கு லைசன்ஸ் வாங்குவதிலுள்ள சிரமங்களையும் கஷ்டங்களையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனாலுங்கூட இப்பொழுது வந்திருக்கக்கூடிய மசோதாவில் 5-வது ஷரத்தைப் பார்த்தால் இன்னும் அதிகமான தொந்தரவுகள் வருமென்று கருதப்படுகிறது. '**The interest of the public generally**' என்று போடப்பட்டிருக்கிறது. லைசன்ஸ் வழங்குவதற்கு வேண்டிய அதிகாரம் ஏற்கெனவே கலெக்டருக்கு இருக்கிறது. பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு தான் கலெக்டர் வேலைகளைச் செய்து வருகிறார்கள். அதே முறையில் தான் லைசன்ஸ் வழங்குகிறார்கள். பொது மக்களின் நலனைக் கவனிக்காமல் கலெக்டர் காரியங்களைச் செய்கிறார் என்று சொல்லமுடியாது. **Interest of the public generally** என்று போடப்பட்டிருப்பதை எப்படி அர்த்தம் பண்ணப்போகிறார்கள் என்றே தெரியவில்லை. அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது லைசன்ஸ் வழங்குவதற்கு உபயோகப்படுத்தப்படுமா லைசன்ஸ் மறுக்கப்படுவதற்கு உபயோகப்படுத்தப்படுமா என்று தெரியவில்லை.

" அடுத்தபடியாக, '**status and previous experience**' என்று, போடப்பட்டிருக்கிறது. தகுதியும் முன் அனுபவமும் இருந்தால் ஒருவருக்கு லைசன்ஸ் கொடுக்கப்போகிறார்களா மறுக்கப்போகிறார்களா என்பது தெரியவில்லை. முன் அனுபவமும் தகுதியும் இருப்பது லைசன்ஸ் வழங்கப்படுவதற்கு அனுசரணையாக இருக்குமா பாதகமாக இருக்குமா என்று தெரியவில்லை.

" ஐந்தாவது ஷரத்து (f) இல் சொல்லப்பட்டிருப்பதாவது—

'(*f*) the possession by the applicant, of other places, if any licensed under this Act, whether in the same locality or elsewhere, and whether at the time of applying for the licence or at any previous time! . . .

முன்பு லைசன்ஸ் வைத்துக்கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று பார்க்கச்சொல்லுவதாக இருக்கிறது. முன்பு லைசன்ஸ் வைத்துக்கொண்டிருந்தவராக இருந்தால் லைசன்ஸ் கொடுக்கப்படுமா மறுக்கப்படுமா என்று தெரியவில்லை. கலெக்டர்கள் எப்படியும் செய்யலாம். ஒருவர் லைசன்ஸ் வேண்டுமென்று மனுச் செய்துகொண்டால் அவருக்கு **status** இல்லை, **previous experience** இல்லை என்று சொல்லி மனு நிராகரிக்கப்படலாம். அதிகாரிக்கு இந்த ஷரத்தின்படி எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மோட்டார் வண்டிகள் சட்டத்திலுள்ளதைப்போல்தான் இந்த மசோதாவையும் செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அந்தச் சட்டத்தில் கொஞ்சம் மாறுதல் உண்டு. கல்வியறிவும் விஞ்ஞான அறிவும் மக்களிடையே பரவவேண்டியிருக்கிறது. தொந்தரவான விஷயம். இது அப்படியல்ல. லைசன்ஸ் வாங்கிவிட்டால் அவ்வளவுதான். ' ஸ்டேடஸ்," முன் அனுபவம் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. பணத்தைப் போட்டு கட்டிடங்களையும் சினிமா நடத்துவதற்கு வேண்டிய சாமான்களையும் வாங்கமுடியும். சினிமா நடத்துவதற்கு லைசன்ஸ் இருக்கிறது. கட்

1st April 1955] [Sri M. Palaniyandi]

டிடம் கட்டுவதற்கும் முதல் போடுவதற்கும் சம்பந்தம் இல்லை. சினிமாப் படங்களை மிஷினில் போட்டு ஓட்டுவதற்கும், சினிமாப் படங்களை பாது காப்பதற்கும் சினிமா ஆபரேடர் பரிக்ஷை எழுதி சர்டிபிகேட்டுகள் வாங் கினவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் படத்தை ஓட்ட முடியாது. அப் படியிருக்கும் ஸ்டேடஸ், முன் அனுபவம் என்று போடப்பட்டிருப்பது எதற்காக ? பணம் இருந்தால் கொட்டகையைக் கட்டிவிட்டு இயந்திரத்தை வாங்கிப் போட்டு சினிமா நடத்தமுடியும். ஸ்டேடஸ், முன் அனுபவம் என்று வேண்டியதில்லை. அப்படிப் போட்டிருப்பது தவறு என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

" பழைய லைசன்ஸ்தாரர்களுக்கு, ஏற்கெனவே சினிமாக் கொட்டகை வைத்திருந்தவர்களுக்குப் புதியதாக லைசன்ஸ் கொடுக்கப்படுமா மறுக்கப் படுமா என்று தெரியவில்லை. அதிகாரிகளுக்கு மேலும் மேலும் அதி காரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் இத்தனை தியேட்டர்கள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் சட்டம் செய்யட்டும். அப்படிச் செய்வதால் லைசன்ஸ் வாங்குவதில் கஷ்டம் இருக்காது. அப்படிச் செய் யாமல் 5-வது ஷரத்தானது மேலும் குழப்பத்தை விளைவிக்கக்கூடிய தாகத்தான் இருக்கிறது.

" டூரிங் சினிமாக்களுக்கு லைசன்ஸ் வழங்கும்போது அதைச் சுற்றி 120 அடி சுற்றளவில் வீடுகள் இருக்கக்கூடாது என்று இருந்தது. அதனால் பலவிதமான தொந்தரவுகள் இருந்தன. அதில் சில மாற்றங்கள் செய் யப்பட்டிருக்கின்றன. இந்த ஷரத்து பூராவும் அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்குகின்றன. அதனால் லைசன்ஸ் வழங்குவதில் கால தாமதம் ஏற்படும். மேலும் மேலும் கஷ்டங்கள்தான் உண்டாகும் என்று நான் சொல்லுகிறேன்.

" லைசன்ஸ் வழங்கும்போது கட்டண விஷயத்தைப்பற்றி கவனிக்க முடியாது. கட்டணம் அதிகமாகப் போட்டால் ஜனங்கள் வரமாட்டார்கள். லைசன்ஸ் கொடுப்பதினால் குறைகள் தெரியமுடியாது. அதை எடுத்து விட்டதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன்.

" 5-வது ஷரத்து (f) என்பதின் கடைசியில் சொல்லியிருப்பதாவது—

'. . and shall also take into consideration any representations made by persons already giving cinematograph exhibitions in and near the proposed locality or by any local authority or police authority within whose jurisdiction the place proposed to be licensed is situated or by any association interested in the giving of cinematograph exhibitions.'

அங்கிருக்கும் சினிமா கொட்டகை முதலாளிகளோ, பொதுமக்களோ, லைசன்ஸ் கொடுக்கும் அதிகாரிகளோ, போலீஸ் அதிகாரிகளோ ஏதாவது ஆட்சேபணை தெரிவித்தால் லைசன்ஸ் வழங்குவது தடைப்பட்டுவிடலாமா என்ற கருத்து இருக்கிறது. அது தவறு. பொது மக்களோ, போலீஸ் அதிகாரியோ யார் ஒருவர் லைசன்ஸ் வழங்கும் அதிகாரிக்கு மனு எழுதியனுப்பினாலும், அந்த மனுவின் நகலை லைசன்சு வேண்டும் என்று மனுச் செய்துக் கொண்டவருக்கு அனுப்பி, அவருடைய அபிப்பிராயத்தையோ சமா தானத்தையோ தெரிந்துகொண்ட பிறகுதான் லைசன்ஸ் வழங்கப்படவேண் டும். லைசன்ஸ் கோரியவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து, அவருக்கு எதிராக எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் சரியானதா, சரியில்லையா என் பதைச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். பின்னால் வரக்கூடிய ஷரத்துக்களில் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். இந்த ஷரத்தில் அதி காரம் கிடையாது. பொது மக்களிடமிருந்து மனுக்கள் வந்தாலும் சரி, அதிகாரிகளிடமிருந்து மனுக்கள் வந்தாலும் சரி அந்த மனுக்களின் விஷயத்தை லைசன்ஸ் கேட்கும் நபரிடம் தெரிவித்து சரியா தவறா என்று சொல்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். பொதுவாக ஐந்தாவது ஷரத்து மிகவும் தொந்தரவு கொடுக்கும் படியானதாகும். 'vague' ஆக இருக்கிறது. மேலும் அதிகமான அதிகாரங்களை லைசன்ஸ் வழங்கும் அதிகாரிக்குக் கொடுத்திருக்கிறார்கள். முன் அனுபவமும், தகுதியும் இருந்தால் லைசன்ஸ் வழங்கப்படுமா,

[Sri M. Palaniyandi] [1st April 1955

வழங்கப்படாதா, அவைகள் இருக்கவேண்டுமா, இருக்கக்கூடாதா என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். இவைகளெல்லாம் தெளிவாக சொல்லப்படா விட்டால் குழப்பமான நிலைதான் ஏற்படும். அதிகமான லைசன்ஸ் வைத் திருப்பவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்படுமா இல்லையா என்பது தெளிவு படுத்தப்படவேண்டும். லைசன்ஸ் சம்பந்தமான விதிகள் வகுக்கும்போது இவைகளெல்லாம் விவரமாக போடப்படும் என்று இப்பொழுது சும்மா இருந்துவிடுவதற்கில்லை. சட்டத்திலேயே தெளிவாக இருந்துவிடுவது நல் லது. இரண்டு டூரிங் சினிமா வைத்திருக்கலாமா, அதற்குமேல் வைத்திருக் கக்கூடாதா என்பதெல்லாம் வரையறுக்கப்பட்டுவிடவேண்டும். இவைகளை யெல்லாம் கனம் மந்திரி அவர்கள் பரிசிலனை செய்து நல்ல முறையில் மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

4-03 p.m. * Sri N. K. PALANISAMY :—'' கனம் சபாநாயகர் அவர்களே, லைசன்ஸ் வழங்கும் முறையில் என்னென்ன நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும் என்று ஐந்தாவது ஷரத்து நிர்ணயிக்கிறது. அதில் பல சிக்கலான விஷயங்கள் இருக்கின்றன. '**The interest of the public generally**' 'அதாவது ஜனங்களின் பொதுவான நலன்' என்று போட்டிருப்பதன் அர்த்தம் என்னவென்பது புலப்படவில்லை. அடுத்தபடி யாக '**status and previous experience**' என்று இருக்கிறது. முன் அனுபவம் இல்லாது போனால் கஷ்டமாகும். ஜனங்களுடைய நன்மைகள் பாதகம் அடையும். சினிமா முதலாளிகளுக்கு முன் அனு பவம் இருக்கவேண்டும். முன் அனுபவம் தேவையில்லை என்று சொல் வதற்கு அர்த்தம் கிடையாது, அவசியம் கிடையாது. சினிமா முதலாளி களுக்கு அனுபவம் இல்லையென்றால் நஷ்டம் வருகிறது. அனுபவம் இருந்தால் லாபம் வரும். ஆனால், சினிமா முதலாளிகளுக்கு லாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி அதைப்பற்றி அவர்கள் கவனித் துக் கொள்ளுவார்கள். ஒரு ஊரில் இத்தனை கொட்டகைகள்தான் இருக்க வேண்டுமென்ற நிர்ணயம் கிடையாது. பத்தாயிரம் ஜனத்தொகை உள்ள இடத்தில் ஒரு சினிமாக் கொட்டகை, 15 ஆயிரம் ஜனத்தொகை இருந்தால் இரண்டு கொட்டகைகள் என்ற ஒரு நிர்ணயம் இருக்கவேண்டுமே தவிர, அப்படியில்லாவிட்டால் மூன்று அல்லது நான்கு சினிமாக் கொட்டகைகள் இருப்பவர்களுக்கு மேலும் 'மொனுபலி' கிடைத்துவிடும். மூன்று நான்கு கொட்டகைகள் வைத்திருப்பவர்களுக்கே மேலும் ஒரு கொட்டகைக்கு' லைசன்ஸ் கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கக்கூடாது. இது பூராவையும் எடுத்துவிடவேண்டுமென்று நான் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன்.''

4-05 p.m. Sri M. JAGANNATHAN :—'' Sir, I do not speak on my amendment because it has been accepted by the Hon. the Minister.''

* Sri S. S. KOLKEBAIL :—'' Mr. Speaker, my amendment is that sub-clause (1) (*b*) be omitted. The clause says—

> 'The licensing authority shall, in deciding whether to grant or refuse a licence, have regard to the following matters, namely:—
>
> (*a*) the interest of the public generally ;
>
> (*b*) the status and previous experience of the applicant.'

There are other conditions also. I am not concerned with (*a*). But (*b*) is replete with all mischief and it is under this provision that the Government have arrogated to themselves all powers. If this is allowed to remain on the Statute Book, I am sure the Government can do and undo things. They can refuse permission to anybody and everybody. About the word 'status', the hon. Member, Mr. Parthasarathi sitting on the other side of the House said this morning that it might offend the Constitution itself. According to the dictionary meaning, man of status means man with some money or property or education. But the Constitution says

that no distinction should be made between man and man and man and woman. As such, this word has no meaning at all here. If it is allowed to remain, I am sure the Collector or whoever the licensing authority may be, can conveniently say ' this man has no status and I refuse him a licence '. The same thing with regard to phrase ' previous experience ' also. What does this provision mean? Does it mean that old persons, persons with experience in the cinema line alone should be granted licences and no newcomers? This point has to be considered. For running a cinema house, no experience is necessary. After all, we have to invest some money and purchase a projector and order for good films. The advertisement is done by the producers themselves. To become a cinema proprietor does not need any experience. To-morrow, I myself may start a cinema house. I do not think I need any experience at all to run it. I need not undergo any training for running a cinema house and there is no special study necessary for it. Under these circumstances I submit that this item (*b*) may be safely omitted. Nothing will be lost and nobody will be harmed thereby.''

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைத் தயாரித்தவர்கள் கொஞ்சம் தந்திரசாலிகள் என்றே நினைக்கிறேன். சாதாரணமாகத் தலைப்புக் கொடுத்திருப்பதைப் பார்த்தால் சினிமாக்களை Regulate பண்ணுவதற்காக என்று இருக்கிறது. லைசென்ஸ் அதிகாரிக்கு அனாவசியமான அதிகாரம் கொடுக்கப்பட்டு பெயரளவில்தான் அந்தத் தலைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் முதலிலேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன். 4-10 p.m.

" என்னுடைய திருத்தத்தில் கிளாஸ் 5-ன் (*b*) பிரிவை எடுத்து விடவேண்டும் என்று கொடுத்திருக்கிறேன். முதலில் சினிமா நடத்தினார்களா இல்லையா என்று அவர்களுடைய அனுபவத்தைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதிலிருக்கும் அனாவசியமான சில வார்த்தைகளை அகற்றவேண்டும். எத்தனை சினிமா கொட்டகைகள் இருக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கவும்கூட லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. Road Transport Authorities எந்த முறையில்நடந்து வருகிறார்கள் என்பதும் அவர்களுக்கு அபரிமிதமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதும் எல்லோரும் அறிந்ததே. இம்மாதிரி அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது சிலருக்கு monopoly முறையை அதிகரிப்பதாக இருக்கும். இதனால் சில குறிப்பிட்டவர்களுக்கு மாத்திரம் லைசென்ஸ் வழங்குவதற்கு ஏதுவாக இருக்குமே தவிர மற்றபடி எல்லோரும் நன்மை அடையக்கூடியதாக இல்லை. நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை கனம் நிதி மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இம்மசோதாவிலுள்ள குறைபாடுகளை சர்க்காருக்கு எடுத்துக்காட்டவேண்டியது எதிர்க்கட்சியினராகிய எங்களுடைய கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கிறது."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, item (*e*) states, ' the benefit to any particular locality or localities to be afforded by the opening of a new place of cinematograph exhibition.' The Hon. Minister himself stated that to some people cinemas may be a nuisance. I wish to add the words, ' and the nuisance it may cause to surrounding areas,' to this item at the end. Sub-clause (7) provides for appeals by an aggrieved person by the decision of the licensing authority refusing to grant a licence. Sir, the very first item of clause 5 is ' the interest of the public generally.' Take for instance a case where a person applies for the grant of a licence,

there is no rival and the licence is also granted. Now, nobody will have a right of appeal. In view of the restriction contained in item (*a*) of clause 5, the public who are also aggrieved by the grant of the licence must have the right of appeal. The authority concerned may have granted the licence to run the theatre in a most inconvenient place and this may cause nuisance to the public in the surrounding areas. In such cases, the public also must have the right of appeal especially in view of the fact that we have put the interest of the public as the first item under 'restrictions'. Sub-clause (7) presupposes that there will be only two parties, viz., the person who refuses the licence and the person to whom the licence is refused. The public are equally interested in the matter and if they have a grievance, they must also have the right of appeal."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Speaker, the hon. Deputy Leader of the Opposition commented on the title of this clause. I do not know why he takes exception to the title. (Interruption.) Instead of giving wide powers, the powers to grant licences are restricted. Sub-clause (1) of clause 5 prescribes certain condtions which ought to be taken into account when the question of issue of licence is considered. Sub-clause (2) states that in certain cases, licence should not be issued. These clauses clarify the whole position and the hon. Members should welcome them as the position has been well-defined. We have clearly stated that under what circumstances the licence should not be issued. This should be welcomed by the hon. Members and I do not know why they are opposing it.

" It was asked, ' why should the Government restrict the number of cinemas in a particular place? Why not the Government allow as many people as possible and thus allow competition? ' In order to avoid cut-throat competition, this clause has been incorporated in the Bill. If there is no such restriction, there will be unhealthy competition. We have seen such unhealthy competition in the case of bus transport when too many bus operators were allowed to run buses in the same route. This is not allowed now. Formerly, permits were granted to too many people to run buses in the same route. There was a race so to say among them and this resulted in a lot of trouble. Similarly, if we allowed too many persons to run theatres in the same place, there will be unrestricted competition and it will result in a lot of trouble. Therefore it is good if there is some restriction so that there may be an orderly exhibition of cinematographs. Otherwise, there will be all sorts of trouble and unhealthy situation created. Sir, it was also asked why the Government should take into account the interest of the cinema proprietors. I may tell the hon. Members that the Government are interested in the general well-being of the community as a whole. We want the cinema proprietors also to thrive. They should not get ruined. If they are to run too many theatres beyond their capacity, it will also be against their own interests. Our restricting the number of theatres will be in the interest of the profession. Sir, the proprietors also have to discharge certain functions to the State

1st April 1955] [Sri M. A. Manickavelu]

in the sense that they must exhibit some good shows for the benefit of the people. Leave alone the bad ones. But there are many good shows which can be exhibited to the people. Take for instance, the shows which have an educative value. Such films must be exhibited. So, it is necessary that the number of cinema theatres in a place should be restricted in the interest of the profession and the health of the locality.

"As regards appeals, it was asked, 'why should the Government make a provision that the appeals should be taken only to Presidency towns? Why not make a provision for appeals in the district itself?' In the matter of appeals regarding bus transport cases, there is a similar provision for taking appeals to the Presidency towns, and it is working well. Except the two amendments which the Government have accepted, I oppose all other amendments."

The amendments of the hon. Member Sri M. Kalyanasundaram (Nos. 34, 35, 36 and 10) were put and lost.

The amendment of the hon. Member Sri S. S. Kolkebail (No. 37) was put and lost.

The amendment of the hon. Member Sri N. K. Palaniswami (No. 6) was put and lost.

The amendments moved by the hon. Members Palaniyandi (Nos. 18, 20, 21 and 22), Narayana Kurup (No. 2), Palaniswami 4-20 p.m.
(Nos. 1 and 7) and Kalyanasundaram (Nos. 11, 12 and 13) were put and lost.

MR. SPEAKER :—" The question is—

'(19) In sub-clause (1), item (*d*), *omit* " the prices charged for such . . . applicant ".' "

The amendment was put and carried.

MR. SPEAKER :—" The question is—

'(30) In sub-clause (2), item (*b*), *for* " the safety of the persons ", *substitute* " the safety, convenience and comfort of the persons ".' "

The amendment was put and carried.

Clause 5 as amended was put and carried.

Clause 6.

MR. SPEAKER :—" Motion moved—

'That clause 6 do stand part of the Bill.' "

SRI M. PALANIYANDI :—" Mr. Speaker, Sir, I move the amendments standing in my name, namely :—

'(23) (1) *In page* 8, *line* 18, after " *dealing with* ", insert " *current* ".

'(24) (2) *In page* 8, *line* 27, for " *two thousand feet* ", substitute " *one thousand feet* ".

'(25) (3) *In page* 8, *lines* 27–28, omit " *or for more than . . . any one show* ".' "

[1st April 1955

SRI M. KALYANASUNDARAM :—" I second the amendments, Sir."

SRI N. K. PALANISAMY :—" I move, Mr. Speaker, Sir, the amendment standing in my name, namely :—

' (8) After *the existing proviso, insert the following further proviso* :—

" *Provided further that no licensee shall be compelled to pay any fee for the exhibition of such films* ".' "

SRI S. S. KOLKEBAIL :—" I second the amendment, Sir."

SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, Sir, I move the amendment standing in my name, namely :—

' (14) After *line* 28, *insert the following further proviso* :—

" *Provided further that such a direction shall not require a licensee to exhibit such film or films for more than seven days in any calendar month* ".' "

SRI M. PALANIYANDI :—" I second the amendment, Sir."

SRI S. S. KOLKEBAIL :—" I move the amendment standing in my name, namely :—

' (38) After *clause* 6, insert *the following new clause* :—

" 6-*A*. *The Government shall direct every licensee or licensees requiring them to play record of National Anthem at the end of every show.*" ' "

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, I like to move one Government amendment to this clause, namely :—

' *In lines* 18–19, after *the words* " *documentary films* ", add *the words* " *indigenous films* ".' "

MR. SPEAKER :—" The clause as well as the amendments are before the House for discussion."

4-23 p.m. SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் 6-வது செக்ஷன் மிகவும் முக்கியமானது. இந்தச் சட்டத்திலேயே ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. படமுதலாளிகள் அதிகப் பணம் போட்டு இந்தத் தொழிலை நடத்துகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தாரால் அதிசக் கஷ்டம் ஏற்படுகிறதே தவிர நன்மை அதிகமாக இல்லை என்று தான் சொல்லவேண்டும். இதை எல்லாம் யோசித்து அரசாங்கம் இந்த லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்தவேண்டும். அவர்கள் 10 நிமிஷம் படம் காட்டுவதற்கு சர்க்காருடன் ஒத்துழைக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தப் படங்களை காண்பிப்பதற்கான நிலைமை மோசமாக இருப்பதால் எதிர்க்கிறார்கள். இதை மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும்.

" அடுத்தபடியாக ஒரு ரேட் நியமிக்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கத்திற்குப் பொறுப்பு கிடையாது. நிச்சயமாக இந்த விஷயத்தில் சர்க்கார் பொறுப்பு எடுத்துக்கொள்வார்களேயானால், முதலாளிகளெல்லாம் இம்மாதிரியாக கஷ்டப்படாமல் நிம்மதியாகத் தொழிலை நடத்த முடியும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த சினிமா தொழில் மிகவும்

லாபகரமான பிசினஸ் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது முதலாளிகளெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த லைசென்ஸ் தொந்திரவும் மற்றத் தொந்திரவுகளும் அவர்களுக்கு மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்த மாதிரியான கஷ்ட நிலைமையிலே அவர்கள் அதிகப் பணம் கொடுத்து வாங்கிப் போடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

"என்னுடைய திருத்தத்திலே 18-வது லைனில் கரண்ட் நீயூஸ் என்று கொடுத்திருக்கிறேன். இரண்டு ஆண்டுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்பொழுது கொண்டுவந்து காண்பிக்கிறார்கள். இந்த விஷயத்தை அரசாங்கம் முக்கியமாக கவனித்து, அப்போதைக்கப்போது நடக்கிற அன்றாட நிகழ்ச்சிகளை (கரண்ட் நீயூஸை) கொண்ட படத்தை கொடுத்துதவ வேண்டும்.

"அடுத்தபடியாக இன்னொரு விஷயம் இரண்டாயிரம் அடி என்பதாகும். என்னுடைய திருத்தத்தில் ஐந்தில் ஒரு பங்கு என்றிருப்பதை எட்டில் ஒரு பங்கு என்று மாற்றும்படியாக கொடுத்திருக்கிறேன். இப்பொழுது அரசாங்கம் கொடுத்திருக்கக்கூடிய அளவு மிகவும் அதிகமாக இருக்கிறது. அதனால் கொட்டகைக்காரர்களுக்கு தொந்திரவுதான் ஏற்படும். லைசென்ஸ் அதிகாரிகள் கரண்ட் நீயூஸ் உள்ள படமாக கொடுத்துதவி பழைய படங்களைப்போட்டு "போர்" அடிக்காதவாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI N. K. PALANISAMY :—"கனம் சபாநாயகர் அவர்களே, 4-27 p.m.
சமீபத்தில் சிடியில் ஒன்றிரண்டு தியேட்டர்களைத் தவிர பாக்கி சினிமாத் தியேட்டர்களில் எல்லாம் இந்த மாதிரியான படங்கள் காண்பிக்கப்படுவதில்லை. காரணம் என்ன? நல்லப் படங்களாக இருந்தால், முதலாளிகள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து, படத்தை வாங்கி ஜனங்களுக்குக் காண்பிப்பார்கள். அது மட்டுமல்ல; இந்தப் படங்கள் ஒரே பிரசாரப் படங்களாக இருப்பதால் ஜனங்கள் எல்லோருக்கும் பிடிப்பதில்லை. பெரும்பாலான ஜனங்கள் இவைகளை அறுவறுக்கிறார்கள். இந்த முறையை ஜனங்கள் விரும்பவில்லை. எப்பொழுதும் ஜனங்களுடைய மனப்பான்மையை அனுசரித்துத்தான் படங்கள் காண்பிக்கபபடவேண்டும். இல்லாவிட்டால் இப்படித்தான் தயங்குவார்கள். நல்லவிதமான படங்கள் இருந்தால் அவர்களே வாங்கிக்கொண்டு காண்பிப்பார்கள். அப்பொழுது இந்த மாதிரியான சட்டம் போடவேண்டியதில்லை. ஆனால் இங்கே என்ன செய்யப்படுகிறது. இஷ்டமான படத்தைப் போட்டாகவேண்டுமென்று அவர்களை வற்புறுத்துவதோடு மட்டுமல்ல; அதற்குப் பணமும் கொடுத்தாகவேண்டுமென்று சொல்லப்படுகிறது. சர்க்கார் இப்படிச் சொல்வது அவ்வளவு நியாயமாகாது. எந்த அடிப்படையில்தான் இப்படிச் சொல்லுகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியவில்லை."

SRI S. S. KOLKEBAIL :—" My amendment reads as follows . . ."

MR. SPEAKER :—" The hon. Member should first address the Chair and then speak."

SRI S. S. KOLKEBAIL :—" I am sorry. Mr. Speaker, Sir, my amendment reads as follows :—

'*After* clause 6, insert the following new clause :—

" 6-A. The Government shall direct every licensee or licensees requiring them to play record of National Anthem at the end of every show." '

" The very purpose of the Bill is to give wide publicity and to carry on certain propaganda work on behalf of the nation. This Bill has come before the House on account of certain decisions given by a certain High Court. Now we find that in all walks of life

[Sri S. S. Kolkebail] [1st April 1955

this propaganda is very necessary. All people, men, women and children go to these cinema houses. It is therefore necessary that this singing of the National Anthem should be introduced in such places. In other countries, it is the practice to sing the National Anthem at the end of every show. It was not uncommon in India also. During pre-Independence days, in almost all the cinema houses, I have seen in the Bombay Presidency, they sung 'God Save the King' at the end of every show. People stood to attention when the song was sung. After India attained independence our cinema owners have dropped that, namely, the singing of 'God Save the King'. But they have not in its place introduced our National Anthem. So I appeal to the Hon. the Leader of the House, who is also the Minister-in-charge of Education, the Minister-in-charge of Law and so many other departments, to accept my amendment and see that this particular thing is introduced into the Act so that the National song might be sung in all theatres at the close of every show.''

4-30 p.m. * Dr. K. B. MENON :—'' Mr. Speaker, Sir, I wish to support the amendment moved by my hon. Friend, Sri Kolkebail. Cinema is a very powerful medium of imparting education among the masses and particularly so in a country where the standard of literacy and the percentage of literacy are low. I accept the fact that mere singing of the National Anthem will not create any sense of loyalty but it has a certain disciplinary and psychological value. It is also necessary that we should popularize the tune among the people. There are very many people who do not know how to sing it and there are many other people who have not even heard it sung. Therefore, it is our duty to popularize it both among the coming generation and the people in the rural areas. I know that as far as children are concerned, they take the salute when the National Anthem is sung before the work begins. It is observed in all schools. I suggest that it should be observed in the cinema theatres also. I remember that during the British rule their National Anthem used to be sung and in order to avoid standing during the time it was sung, some of us used to scramble out from the theatre when the film-show was about to close. I am sure that will not happen now since we are now a free people. Sir, when we are doing a thing, we should see that it is done in the proper way. We should insist that everybody should stand up and should not leave the theatre before the National Anthem is over. If such a thing is observed, it may help to create a sense of loyalty among the people. Therefore, the amendment may be accepted by the Government provided proper discipline can be enforced.''

4-32 p.m. Sri M. KALYANASUNDARAM.—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தைப்பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்தினுடைய நோக்கம் என்னவென்றால், இதில் இருக்கக்கூடிய நிர்ப்பந்தம் அதாவது கட்டாயப்படுத்தக் கூடியதை ஓரளவு குறைத்து சர்க்காருடைய விருப்பத்திற்கும், பட முதலாளிகளுடைய விருப்பத்திற்கும் இடையே ஒரு நடுநிலையான சமரசத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் என்னுடைய திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்வதினால் சர்க்காரினுடைய நோக்கம்

1st April 1955] [Sri M. Kalyanasundaram]

நிறைவேறுவதில் ஒருவித குந்தகமும் ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கல்வி சம்பந்தமான படங்கள், பொது அறிவு வளர்ச்சிக்கான உதவி செய்யக்கூடிய படங்கள் காட்டப்படவேண்டும். அவைகளை நாங்கள் வரவேற்போம். அதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. இன்னும் ஏதோ படங்கள் சர்க்காரே தயாரிக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அதிலேயும் எங்களுக்கு எவ்வித மாறுபட்ட கருத்தும் கிடையாது. மந்திரி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியார் இதை எதிர்த்து, சர்க்கார் படங்கள் பிடிப்பது தவறு என்று நினைப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்த மாதிரியான எண்ணம் எனக்குக் கிடையாது. சர்க்கார் முழுநேரப் படத்தையே தயாரிக்க முன்வந்தாலும், அதற்கு நாங்கள் ஆதரவு கொடுப்போமே ஒழிய எதிர்ப்பு கிடையாது. ஆனால் இன்றைக்குச் சர்க்கார் இதை நடைமுறையில் நடத்துவது என்றால் அவ்வளவு சுலபமல்ல. அதிலே இரண்டிற்கும் இடமிருக்க வேண்டும். அதாவது தனிப்பட்ட முதலாளிகளுக்கும், சர்க்காருக்கும் அதிலே இடமிருக்கவேண்டும். இப்போது இருப்பது மாதிரி தனிப்பட்ட முதலாளிகளே படங்கள் தயாரித்துக் கொண்டிருக்க விட்டுவிட்டு, சர்க்கார் ஒதுங்கியிருப்பதும் சரியல்ல. படங்கள் தயாரிப்பதிலேகூட தனிப்பட்ட முதலாளிகளிடமே விட்டு விடாமல், சர்க்காரும் முழுநேரப் படங்கள் எடுப்பதிலே இறங்கினால் அந்தப் போட்டியின்மூலம் உற்பத்தி செய்யப்படும் படங்கள் நல்ல படங்களாக இருக்கமுடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் இன்றைக்கு சென்னை பஸ்ஸை சர்க்கார் எடுத்துக்கொண்டு, கெட்ட பெயர் வாங்குவதுபோல் பெயர் வாங்கினாலும் வாங்கலாம். சர்க்காரே நடத்தப் போய், இனி தனிப்பட்ட முதலாளிகள் நடத்தினாலே பரவாயில்லை என்று ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினாலும் ஏற்படும். இதற்குக் காரணம் சர்க்கார் அல்ல; நிர்வாகத்திறமையின் குறைவாகும். அதற்காக சர்க்கார் இத்தொழிலை மேற்கொள்ளவேண்டாமென்று சொல்லவில்லை. பேஷாக நடத்தலாம். அதே சமயத்தில் தனிப்பட்ட முதலாளிகள் தயாரிக்கும் படங்கள் சில ஆபாசங்களோடு வெளிவருகின்றன என்பதும் வாஸ்தவம். ஆனால் இதையெல்லாம் பொது மக்கள் இன்று ஆராயக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் படங்களைப் பார்க்கலாம், இவைகளைப் பார்க்கக்கூடாது என்ற அனுபவம் இன்றைக்கு வந்திருக்கிறது. படுமோசமான மக்களுக்குப் பிடிக்காத படங்களைத் தயாரிப்பதால் அவ்வளவு அதிகப்பண வசூல் இருப்பதில்லை. சில நாளைக்குத்தான் ஓடுகின்றன. பின்னர் தானாகவே வசூல் இல்லாமல் நிறுத்தப்படுகின்றன. காட்டப்படும் படங்கள், கதை எழுதுவோர்கள் எல்லாமே இன்றைக்கு மக்களுடைய கருத்துக்குத் தகுந்தமாதிரி தான் மாற்றி அமைக்கப்படுகின்றன. அப்பொழுதுதான் மக்கள் அதை விரும்பிப் பார்க்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு சொந்த விருப்பு வெறுப்புப்படி கதைகளும், அதற்கு ஏற்றவாறு படங்களும் தயாரிக்கப் பட்டுவந்தன. ஆனால் சமீபத்தில் வரக்கூடிய கதைகளைப் பார்த்தால் கதை எழுதுவோர்கள் தங்களுடைய சொந்தக் கருத்து ஒரு மாதிரியாக இருந்தாலும்கூட ஜனங்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய, அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் தங்களுடைய கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நடிகர்களும் அந்த மாதிரியாகத் தான் இன்று தங்களுடைய கொள்கை எதுவாக இருந்தாலும், மக்களுடைய விருப்பத்திற்குத் தகுந்தவாறு தாங்களும் மாறிக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான், '**The man in the street is nearer to truth**' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சும்மா சொல்லிவிடவில்லை. மக்களுக்கு அந்தச் சக்தி இருக்கிறது; தீமைகளைத் திருத்தக்கூடிய சக்தியுள்ளவர்கள். ஆகையால் சர்க்கார் அதிலே நம்பிக்கை வைத்து, படத்தொழிலில் இறங்குவார்களானால் மிகச் சிறந்த படங்களை தயாரித்துக் காட்டமுடியும். அப்போர்ப்பட்ட படங்களை ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் காட்டவேண்டியதுதான். அதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை. அவைகள் மக்களுக்கும் உபயோகப்படும். இவ்வித முறையில் சர்க்கார் முழுநேரப் படத்தையே தயாரிக்க விரும்பினாலும் அதற்கும் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்பொழுது சர்க்காரிடத்திலே கைவசமுள்ள படங்களைத் தொடர்ந்து காட்டப்படவேண்டுமென்று சொல்வதைத்தான் சரியல்ல என்று கூறுகின்றோம்.

[Sri M. Kalyanasundaram] [1st April 1955

இப்போது சர்க்காரிடத்திலே உள்ள படங்கள் பூராவும் அநேகமாகச் செய்திப் படங்களாகத்தான் இருக்கின்றன. அந்த செய்திப் படங்களைத் தொடர்ந்து காட்டவேண்டுமென்று சொன்னால் மக்களுக்கு உற்சாக மிருக்காது. மேலும் அவைகள் பெரும்பாலும் பிரசாரப் படங்களாக இருக்கின்றன. காலக்கிரமத்தில் இனிமேல் தனிப்பட்ட நபர்கள் இம்மாதிரியான படங்களை உற்பத்தி செய்வதற்கு முன் வருவார்களா என்பதையும் பார்க்கவேண்டும். இப்போது சர்க்கார் கூறியுள்ளபடி இரண்டாயிரம் அடிக்கு படங்கள் எடுப்பதால் தங்களுக்கு லாபம் கிடைக்குமா நஷ்டம் ஏற்படுமா என்பதைத் தனிப்பட்ட முதலாளிகள் யோசித்து, பின்னர் இம்மாதிரியானப் படங்கள் எடுக்க உடனடியாக முன்வருவார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே இம்மாதிரியான படங்களை எடுப்பதில் முதலில் சர்க்கார் பொறுப்பாக இருந்துவரவேண்டும். ஆகவே இன்னும் கொஞ்ச காலத்திற்கு இதைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி கட்டாயப்படுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி கட்டாயப்படுத்தவேண்டும் என்ற அவசியம் கனம் நிதி மந்திரி அவர்களுக்கு இருந்தாலும்கூட, ஒரு மாதத்திலே மிகச் சிறந்த படமாக இருந்தால் 15 நாளைக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். அதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை. அந்த முறையில்தான் நான் 7 நாட்களுக்குமேல் கூடாது என்று என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இன்னும் நண்பர் ராமலிங்கம் 15 நாட்கள் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்று அவர் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார். இதையெல்லாம் சற்று ஒப்பு நோக்கிப்பார்த்து எப்படிச்செய்யலாம் என்பதை ஆலோசித்து ஏதாவது ஒரு திருத்தத்தை ஒப்புக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

4-37 p.m, THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, I am sorry I am unable to accept any of the amendments except my own. (Laughter.) With reference to the argument advanced against the compulsion, one hon. Member even went to the extent of saying that these films were not liked by the people. I am not quite sure about it. A major section of the people do welcome them and they do like them.

'' Then, the hon. Deputy Leader of the Opposition, Sri Kalyanasundaram suggested a compromise formula by which these films would be shown for at least 15 days in a month as there would be good and bad films also. If it is a good film, why it should be restricted to fifteen days. Let us give greater scope for good films to run for some more days and they should not be restricted to 15 days. I do agree that we cannot maintain a uniform standard in the production of such films and some films are interesting and some of them are not interesting. Even in respect of story films, some productions are good, but some films produced by the same film company become a complete failure. So, in these films we cannot expect a uniform standard. We cannot condemn any film by that standard. As far as the present tendency is concerned, I am told—I have not seen any film in recent times—that the standard of both the story films and documentary films is improving. I am glad about it and I hope that they will be improved in such a way that even persons who refrain from going to films would be induced to see them.''

MR. SPEAKER :—'' Has the Hon. Minister got anything to
4-40 p.m. say with reference to the amendment of Sri Kolkebail? ''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, with reference to the hon. Member Sri Kolebail's amendment, I do not deny the

laudability of the object behind it, but I am afraid it may not be practicable to enforce discipline. As pointed out by Dr. Menon, it would be a good thing if everybody stands up when the National Anthem is sung. But after a long film, the tendency on the part of the public would be to run away and I do not think we will be able to impose any kind of restriction. It should come as a voluntary act and there should be no sort of compulsion. I would rather leave it at that.

"As for the other thing, news means 'current news'. If it is any other thing, it becomes history. We have stated 'films dealing with news and current events'. I think that is enough."

MR. SPEAKER :—" Is the hon. Member Sri M. Palaniyandi withdrawing his amendments? "

SRI M. PALANIYANDI :—" Sir, I am pressing my amendments."

The amendments of the hon. Member Sri M. Palaniyandi (Nos. 23, 24 and 25) were put and lost.

The amendment of the hon. Member Sri N. K. Palanisamy (No. 8) was put and lost.

The amendment of the hon. Member Sri M. Kalyanasundaram (No. 14) was put and lost.

SRI S. S. KOLKEBAIL :—" Sir, I am withdrawing my amendment."

The amendment of the hon. Member Sri S. S. Kolkebail was, by leave of the House, withdrawn.

MR. SPEAKER :—" Now, we shall take up the Government amendment. The question is—

'In lines 18–19, *after* the words "documentary films", *add* the words "indigenous films".' "

The amendment was put and carried.

Clause 6, as amended, was put and carried.

Clause 7.

MR. SPEAKER :—" The motion is—

'That clause 7 do stand part of the Bill.' "

SRI M. NARAYANA KURUP :—" Sir, I move the amendments standing in my name (Nos. 3 and 4)—

'*In sub-clause* (1), *in line* 6, after *the word* "*exhibited*", add *the words* "*and which would be an objectionable performance under the Madras Dramatic Performance Act of* 1954 *if it were a drama*".

[Sri M. Narayana Kurup] [1st April 1955

' Add *the following proviso to sub-clause* (3) :—

" *Provided that the Government or the District Collector may review their own order passed under sub-clause* (1) ".' "

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM :—" Sir, I move amendments Nos. 15 and 16 standing in my name—

' *In page* 9, after *sub-clause* (5), insert *the following* :—

" (6) *Any licensee aggrieved by an order issued under sub-section* (3) *may appeal to the High Court in respect of orders issued by the Government, or to the corresponding District Judge if the order is issued by the District Collector.*"

' *In sub-clause* (1), *line* 33, after " *breach of the peace* ", insert " *and if the film to be exhibited is an objectionable performance as defined in the Madras Dramatic Performances Act* ".' "

SRI M. PALANIYANDI :—" Sir, I second the above amendments."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, really I am unable to appreciate the meaning of this clause, though it very closely follows the clause in the Dramatic Performances Act, but with this important distinction that there the performance should be of an objectionable nature which is likely to lead to a breach of the peace. There it is stated ' like performance '. Therefore, under that Act, in order that an authority may be empowered to prohibit the exhibition of a performance it must entail in a breach of peace and it must be a performance, of a like nature, that is, it must be an objectionable performance. Item 60 of list I of the Seventh Schedule says ' sanctioning of cinematograph films for exhibition '. Now, all these films are exhibited after the sanction of the Central Government or by the Censorship Board. I do not see why the films which are passed by the Board should be prohibited by any authority and I do not know whether they have got the power to prohibit at all. A cinema is a public place and when there is likely to be a breach of the peace or when there is a breach of the peace, the police have got ample powers to prevent it and regulate it. Therefore, I fail to see how a film sanctioned by the Board and the Central Government for exhibition will entail in a breach of peace. Therefore it is I have given my amendment.

" As regards my other amendment, there is provision for *ex parte* orders and as it is, the order can be in force for 15 days. It may be that a similar amendment was accepted in the case of the other Act also. I do not say that it should be acceptable here also. It may be that after hearing the party, there may be no necessity for the order. It may not be necessary to continue it for 15 days at all. Even after the lapse of one or two days the necessity for the prohibition may cease. My amendment seeks to empower the authority to withdraw it or review that order because it is passed *ex parte*. Clause 7 (1) says " The Government in

respect of the whole of the State or any part thereof, and the District Collector within his jurisdiction, may if they or he are **or is of** opinion that any film which is being or is about to be publicly exhibited is likely to cause a breach of the peace, by order, suspend the exhibition of the film '. First of all, I do not understand how it will lead to a breach of the peace and I require enlightenment in the matter by the Hon. the Minister.''

* **Sri M. PALANIYANDI.**—" இந்த 7-வது **section** வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். காரணம், இந்தப் படங்களையெல்லாம் தணிக்கை செய்வதற்கு என்று ஒரு **Censor Board** வைத்திருக்கிறார்கள். அங்கு எல்லாவற்றையும் பரிசீலனை செய்து, சரிபார்த்து, வெட்டி, திருத்தித்தான் படங்களை வெளியே அனுப்புகிறார்கள். ஆகவே, அந்த படங்கள் வெளி வந்த பிறகு '**breach of peace**' ஏற்படும் என்று எதிர்பார்ப்பது தவறானது. சாதாரணமாக எடுத்துக்கொண்டால், இப்போதெல்லாம் அரசியல் நோக்கங்களைக் கொண்ட படங்களும், சில சமூகங்களை எதிர்க்கும் படங்களும் வந்துகொண்டிருக்கின்றன என்று கருதப்படுகிறது. இவற்றைப் பரிசீலிக்க **Censor Board** இருப்பதால், அதிகப்படியான அதிகாரத்தை கலெக்டருக்குக் கொடுக்கவேண்டியதவசியமில்லை. இதன் விளைவாக வேண்டுமென்றே சிலர் இந்தப்படத்தில் தவறான கருத்துக்கள் இருக்கின்றன. அதைக்காட்டுவது தவறு என்று சொல்லி, ஒரு கலவரம் ஆரம்பித்து அந்தப் படத்தைத் தடை செய்யும்படி செய்துவிடலாம். நாடகச் சட்டம் வந்ததற்கு காரணமும் இதுதான். யாரோ ஒருவர் 'கீமாயணம்' நாடகம் நடத்தியதில், அதில் தவறான கருத்துக்கள் இருக்கின்றன என்று சொல்லி குழப்பம் ஏற்பட்டதன் பலனாக, அந்த நாடகத்தை நடத்தக்கூடாது என்று சட்டம் வந்தது. இதைப்போலவே, ஒரு சிலர் ஒரு படத்தில் ஏதாவது ஒரு பாகத்தைப் பார்த்துவிட்டு, அல்லது ஒரு பாட்டைக் கேட்டுவிட்டு, அது எங்களுக்குப் பிடிக்கவில்லை, நாங்கள் குழப்பம் செய்கிறோம் என்று ஆரம்பித்தால் '**breach of peace**' ஏற்பட்டு படத்தை நிறுத்திவிடலாம். ஆகவேதான், வேண்டுமென்றே தகராறுகள் ஏற்படுத்த விரும்புபவர்களுக்கு இந்த **section** வசதியளிக்கிற காரணத்தினால் இந்த **section** ஏ வேண்டாம் என்று கருதுகிறேன். 4-46 p.m.

" அடுத்தபடியாக **sub-clause** (5)-ல் '**shall remain**' என்றிருக்கிறது. அதாவது இந்த தடையுத்தரவு 15 நாள் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜில்லா கலெக்டர் அவர்கள் உடனடியாக தியேட்டர்காரர்களுக்கு எழுத்துமூலமாக என்ன தவறு இருக்கிறது அந்தப் படத்தில் என்பதை தெரிவித்து, அதைத் திருத்தியோ அல்லது அந்தப்பகுதியை மாற்றிவிட்டோ படத்தை காண்பிப்பதற்கு ஏன் அனுமதிக்க கூடாது என்பது புரியவில்லை. தடையுத்தரவு 15 நாள் நீடிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. திருத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட படத்தைப் போடுவதற்கு ஏன் தடையிருக்கவேண்டும்? ஆகவே '**shall remain**' என்பதை '**may remain**' என்று போட்டால் சரியாக இருக்கும். '**Shall**' என்று போடவேண்டாம் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

" மேலும் ஜில்லா கலெக்டர் அவர்கள் அவருடைய உத்திரவை மாற்ற மறுத்துவிட்டாலும்கூட, ஜில்லா கலெக்டருக்கு மேல் **authority** இந்த விஷயத்தில் ஜில்லா ஜட்ஜாக வைத்து விடலாம். ஜில்லா ஜட்ஜுகளுக்கு அதிகாரம் அளித்து அவர்களிடம் அப்பீல் செய்துகொண்டு, நடவடிக்கை எடுக்க வழி செய்யலாம். அதேபோல் தடை யுத்திரவை அரசாங்கமே பிறப்பித்தால், அது சம்பந்தமாக **High Court**-க்கு அப்பீல் செய்து கொள்ள அதிகாரம் இருக்கவேண்டும்.

" ஆகவே, இந்த முழு **section**-ம் தகராறு செய்பவர்களுக்கு இடம் கொடுக்கிறது என்பதை மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். தவறான கருத்துக்களையோ, அல்லது பிறருடைய எண்ணங்களைப் புண்படுத்தும்படியான கருத்துக்களையோ கொண்ட படங்களை தணிக்கை செய்ய ஏற்கனவே ஒரு **Censor Board** இருக்கிறது. ஆகையால் இந்த **section**-ஐ வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, அப்படியிருந்தாலும்கூட, **sub-clause** (5)-ல்

[Sri M. Palaniyandi] [1st April 1955

' **shall remain** ' என்றிருப்பதை ' **may remain in force for a period of two weeks** ' என்று போட்டு, அதற்குள் கலெக்டர் தியேட்டர்காரர் களுக்கு எழுதி, தவறான பகுதியை மாற்றியோ அல்லது எடுத்துவிட்டோ படத்தைப் போடுவதற்கு வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்."

4-48 p.m. SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாக காரணங்களை காண்பித்து, சினிமாப்படங்களை ஜில்லா கலெக்டர் இரண்டு வாரங்கள் தடை செய்யலாம், சர்க்காரை பொறுத்தவரை, காலவரையறையின்றி, தொடர்ச்சியாக தடை விதித்துக்கொண்டே போகலாம் என்ற அதிகாரம் இருப்பதற்கு அவசிய மென்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. நண்பர் பழனியாண்டி சொன்னது மாதிரி, இந்தப் படங்களின் கருத்துக்களை பரிசீலனை செய்து, ஒழுங்கு படுத்துவதற்கென்றே ஒரு **Censor Board** இருக்கிறது. அப்படியே சில படங்களில் தவறான கருத்துக்கள் உள்ளடங்கியிருந்து, அவை யாருடைய மனத்தையாவது புண்படுத்துவதாக இருந்தாலும், அந்த படத்தை திரும்ப **Censor Board**-க்கு அனுப்பி, மாறுதல்களுடன் வெளியிடுவதற்கு வேண் டிய வசதி யிருக்கிறது. ஆகவே, இரண்டு வாரம் அல்லது கால வரை யறை யின்றி தடை உத்திரவு போடவேண்டிய அவசியம் என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மாதிரி அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படாது என்று நான் சொல்ல விரும்பவில்லை. நேர்மையான கருத்துக்கள் உள்ள படங்களை ஒரு சிலர் தவறாக புரிந்து கொண்டு, தகராறுகள் உண்டாக்கலாம் அல்லது வேண்டுமென்றே சிலர் குழப்பத்தை விளைவிக்கலாம். ஆனால் இவற்றிற்கு எல்லாம் பரி காரம் சர்க்கார் கையிலேயே இருக்கிறது என்பதையும் சொல்ல விரும்பு கிறேன். அப்படியே அந்தத் தவறான கருத்துள்ள படங்கள் ஒரு நாள், இரண்டு நாள் காட்டப்படுவதாக இருந்தாலும்கூட, அதற்கு—அதாவது அந்த படத்தை காட்டுவதற்கு—சர்க்கார் பாதுகாப்பு கொடுக்கவேண்டிய அவசியமிருக்கிறது. ஏனென்றால், அந்தப் படம் முன்னதாகவே பரி சீலனை செய்யப்பட்டு, பிறகுதான் வெளிவரக்கூடிய காரணத்தினால், அதை காட்டுவதற்கு சர்க்கார் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆகவே, அமை திக்குப்பங்கம் விளைவிக்கக்கூடும் என்ற காரணத்தைக்கொண்டு படத்தை தடை செய்வது, நியாயமில்லை என்று கருதுகிறேன்.

" அடுத்தபடியாக, இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு அக்கிரம மான உத்திரவுகள் பிறப்பிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான், நான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். அதாவது, ஜில்லா கலெக்டர்கள் போடும் உத்திரவிற்கு எதிராக டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளிடம் **appeal** செய்து கொள்ளும் உரிமையும், சர்க்கார் போடக்கூடிய உத்திரவிற்கு எதிராக **High Court**-ல் அப்பீல் செய்துகொள்ள உரிமையும் இருக்கவேண்டு மென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆனால் கனம் நிதி மந்திரி அவர்கள் அதை ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்காமலே, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

4-50 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I do not want to disappoint my hon. Friend Mr. Kalyanasundaram by accepting his amendment." (Laughter.)

" Sir, the point is this : No doubt there is a Censor Board for the purpose of censoring the films. In spite of that, because of certain features in the films they may be objectionable in a particular locality because of the peculiar conditions prevailing there and peculiar customs prevailing there. In such cases authorities should have power to stop it and the authority concerned should have sufficient status so that this power will not be misused. That is why we are giving power to no less an officer than the District Collector and not to any subordinate authority as such. Over and above that, the Government have power to review such an order. I am, therefore, accepting Sri Kurup's amendment (No. 4), but not in the

place where he suggests, that is, not to sub-clause (3), but to sub-clause (5). I accept Mr. Kurup's amendment as proviso to sub-clause (5).

"I may assure that it is not likely to be misused and I am hoping that many occasions will not arise for the use of this power. But if occasions do arise, there should be a provision in the enactment."

